பரி.பவுல்

அஹமதி தமிழ் திருச்சபை



கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

சங்கீதம் 100:5

செய்திமலர்

இதழ்:09

மலர்:35

OCTOBER 2026

www.ahmaditamilchurch.com

முதன்மை ஊழியரிடமிருந்து



உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் உண்டாவதாக. இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். எல்லா சத்துருக்களுக்கும் பொல்லாங்கனுக்கும் நம்மை விலக்கிக்காக்கும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம். எல்லா ஆராதனைகளிலும் ஜெபக்கூடுகைகளிலும் சபையின் குடும்பங்கள் எல்லோரும் கலந்து கொள்ளவும் ஜெபிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேவனுக்கு பிரியமானவர்களே! இந்த மாதமானது நமக்கு கர்த்தரால் உண்டாகும் வெற்றியின் மாதமாக இருக்கும். யார் யாரெல்லாம் சோர்ந்து கலக்கமுற்று பயந்து நிற்கிறீர்களோ... அது சத்துருவாக இருக்கலாம்: நோய், வியாதியாக இருக்கலாம்: கடன் பிரச்சனையாக இருக்கலாம்: ஒருவேளை வேலை ஸ்தலமாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு நம் கர்த்தர் அதிசயமான காரியங்களை செய்ய போதுமானவராய் இருக்கறார். நம் கர்த்தர் எப்போதும் நம்மோடு இருக்கிறார் என்பதை நாம் ஒரு நாளும் மறந்து விடக்கூடாது.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் வாழ்ந்த பொழுது அவர்களுடைய வாழ்க்கை மிகுந்த கசப்பாக இருந்தது. அதனால் அவர்களுடைய கூக்குரல் மிகவும் அதிகமாகவும் இருந்தது. எந்த இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை மறந்து மனம்போல் வாழ்ந்து வந்தார்களோ அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையே அவர்களுக்கு கசப்பை பெருகப்பண்ணிற்று. வேதனை பெருகினபோதோ தேவனை நினைவு கூர்ந்தார்கள்: தேவனை நோக்கி அபயமிட ஆரம்பித்தார்கள். நம் தேவன் உருக்கமும் இரக்கமும் சாந்தமும் கிருபையும் உள்ள தேவன். அதை இஸ்ரவேல் ஜனங்களிடத்திலும் விளங்கப் பண்ணினார். அநேக அதிசயங்களால் இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து கானான் தேசத்தை சுதந்திரமாக சொந்தமாக கொடுத்தார்.

காலங்கள் கடந்து சென்ற பொழுது மீண்டும் அவர்களுடைய பொல்லாத நடபடிகளினால் அவர்களுக்கு உபத்திரவம் நேரிட்ட போது அவர்களின் வேண்டுதலைக் கேட்டு மனமிரங்கி அவர்களுக்கு கர்த்தர் மீண்டும் வாக்குப்பண்ணினார் **"நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்"** (மீகா. 7:15) என்று.

கசப்பான வாழ்க்கை யாருக்கு எப்படி ஏற்பட்டாலும் நாம் நம்மை தேவனுக்கேற்றபடி எரிசெய்து, கர்த்தராகிற இயேசுவை நோக்கிக் கூப்பிடும் போது நம் தேவன் நமக்கு செவிசாய்த்து நம்முடைய வாழ்க்கையிலும் அதிசயங்களைச் செய்து, கர்த்தர் தம் நாமத்தை நம்மில் மகிமைப்படும்படி செய்து முடிப்பார். எப்பொழுதும் கர்த்தரையே பற்றிக் கொள்வோம்: கர்த்தரோடு வாழ்வோம். தேவன் நம்மோடு கூட இருப்பார். ஆமென்.

கர்த்தர் கிருபையில்

சகோ. ஆரோக்கியதாஸ். P

இயேசு மிகவும் நல்லவர்

"கர்த்தர் நல்லவர் அவருடைய கிருபை என்றென்றைக்கும் உள்ளது" (சங்.100:5).

நம் வாழ்க்கையில் பல மனிதர்களை நாம் சந்திக்கிறோம். சிலர் நம்முடன் மகிழ்ச்சியில் இருப்பார்கள்: சிலர் நம்முடைய கஷ்ட நேரங்களில் நம்மை விட்டு விலகிவிடலாம். ஆனால் எந்த நிலையிலும் நம்மை விட்டு விலகாதவர் இயேசு கிறிஸ்து. அவர் உண்மையிலே மிகவும் நல்லவர்.

இயேசுவின் நன்மை என்பது வெறும் வார்த்தைகளில் மட்டுமல்ல அது நம் வாழ்க்கையில் அனுபவிக்க கூடிய உண்மையாகும். நாம் பலவீனமாக இருக்கும் போது அவர் நம்மைப் பலப்படுத்துகிறார். நாம் வழி தெரியாமல் நிற்கும் போது அவர் வழி காட்டுகிறார். நாம் கண்ணீருடன் இருக்கும் போது நம்மைத் தேற்றுகிறார். நாம் விழுந்து போகும் போது மீண்டும் எழுந்து நிற்க உதவுகிறார். ஏன் என்று பார்ப்போம்.

1.இயேசு நம்மை நேசிக்கிறார்.

"நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தோம் என்பதல்ல அவர் நம்மில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களுக்கு பிராயசித்தமாகத் தம்முடைய குமாரனை அனுப்பினார்" I யோவான் 4:10.

உலகத்தின் அன்பு பல நேரங்களில் நம்முடைய நிலைமையைப் பொறுத்தது. ஆனால் இயேசுவின் அன்பு நிபந்தனையற்றது. நாம் தகுதியற்றவர்களாக இருந்த போதும் நம்மை மீட்பதற்காக சிலுவையில் தம்மையே அர்பணித்தார். சிலுவை நமக்குச் சொல்வது ஒன்றே "நீ எனக்கு மிகவும் விலையுயர்ந்தவன்"

2. இயேசு நம்மை விட்டு விலகுவதில்லை.

“நான் உன்னை விட்டு விலகுவதில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை” எபிரேயர் 13:5.

வாழ்க்கையில் சில நேரங்களில் எல்லா கதவுகளும் மூடப்பட்டது போல தோன்றலாம். நண்பர்கள் விலகலாம். எதிர்பார்த்த உதவி கிடைக்காமல் போகலாம். எதிர்காலம் குறித்து பயம் ஏற்படலாம். ஆனால் அத்தகைய நேரத்திலும் இயேசு நம்முடன் இருக்கிறார். நாம் அவரைக் காண முடியாத நேரத்திலும் அவர் நம்மைக் காண்கிறார். நாம் அவருடைய கையைப் பிடிக்க முடியாத நேரத்திலும் அவர் நம் கையைப் பிடிக்கிறார்.

3. இயேசு நம்முடைய பாரங்களைச் சுமக்கிறார்.

“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாருதல் தருவேன்” மத்தேயு 11:28.

ஒவ்வொருவருக்கும் வெளியில் தெரியாத ஒரு பாரம் இருக்கலாம். குடும்பப் பிரச்சினை பொருளாதாரக் கவலை எதிர்கால பயம் தோல்வி ஏமாற்றம் அல்லது தனிமை என எதுவாக இருந்தாலும் அதை இயேசுவிடம் கொண்டு வரலாம். இயேசு நம்முடைய பிரச்சினைகளை மட்டும் பார்க்கிறவர் அல்ல பிரச்சினைகளுக்குள் இருக்கும் நம்மையும் பார்க்கிறவர். அவர் நம்மிடம் “உன் பாரத்தை என்னிடம் கொடு” என்று அழைக்கிறார்.

4. இயேசு வழி காட்டுகிறார்.

“நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிக்கிறேன்” யோவான் 14:6.

வாழ்க்கையில் சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பது எப்பொதும் எளிதல்ல ஆனால் இயேசுவைப் பின்பற்றும் போது நமக்கு ஒரு நம்பிக்கையான வழிகாட்டி இருக்கிறார். அவர் நமக்கு வாழ்க்கையின் பாதையை மட்டும் காட்டுவதில்லை அவரே நம்முடைய பாதையாக இருக்கிறார்.

5. இயேசு மாறாதவர்.

"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" எபிரேயர் 13:8.

நம்முடைய சூழ்நிலைகள் மாறலாம். மனிதர்கள் மாறலாம். நம்முடைய உடல்நிலை வேலை பொருளாதாரம் பொறுப்புகள் அனைத்தும் மாறலாம். ஆனால் இயேசுவின் அன்பும் இரக்கமும் நன்மையும் மாறுவதில்லை. நேற்று நம்மை நடத்தினவர் இன்று நம்மை நடத்துகிறார் நாளையும் நம்மை நடத்துவார்.

முடிவுரை

"இயேசு மிகவும் நல்லவர்" என்று சொல்வது ஒரு பாடலின் வரி மட்டுமல்ல அது ஒரு விசுவாசியின் வாழ்க்கை அனுபவமாக இருக்க வேண்டும். நாம் பின்னோக்கிப் பார்த்தால் எத்தனையோ ஆபத்துகளிலிருந்து அவர் நம்மைக் காத்திருப்பதை காணலாம். எத்தனையோ கண்ணீரின் நடுவில் அவர் நம்மைத் தேற்றியிருப்பதை நினைவுகூரலாம். முடியாது என்று நினைத்த நேரங்களில் அவர் ஒரு வழியைத் திறந்திருக்கிறார். ஆகவே இன்று நம் இருதயத்திலிருந்து நாம் சொல்லுவோம். "இயேசுவே நீர் மிகவும் நல்லவர்! என் வாழ்வில் நீர் செய்த நன்மைகளுக்காக நன்றி. என்னை விட்டு விலகாமல் நடத்தினதற்காக நன்றி என் பாவங்களை மன்னித்து இரப்சிப்பைக் கொடுத்ததற்காக நன்றி என் கடந்த காலத்திற்க்கும் எதிர்காலத்திற்க்கும் நீர் போதுமானவர்".
"கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்" அவர் கிருபை என்றென்றைக்கும் உள்ளது. சங்கீதம் 118:1.

இயேசு நல்லவர். ஏப்போதும் நல்லவர். அவர் நேற்று நல்லவர். இன்றும் நல்லவர். இயேசு என்றுமே நல்லவவர். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

கிறிஸ்துவுக்குள்
Bro. சாம்ஆனந்த்

வாலிபர் பகுதி

பொறுமை கடலினும் பெரிது

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.பெரியவர்கள் சொல்வார்கள் பொறுத்தவன் பூமி ஆள்வான் என்று ஆம், சகோதர சகோதரிகளே பொறுமை என்பது மிகவும் முக்கியமானது. அதுவும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டு வாழ்கிற கிறிஸ்தவனின் வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாதது பொறுமை. எல்லாம் வேகமாக கிடைக்க வேண்டும், வேகமாக வாழ வேண்டும் என்று instant ஆக வாழ்கிற ஆடம்பரமான நாகரீகமான வாழக்கையில் பரலோகம் என்ற நிச்சயத்தை வேகம் என்று சொல்லி பொறுமையிழந்து மறந்து விடுகிறவர்களாக காணப்படுகிறோம்.

நம் வேதாகமத்தில் கூட தேவனுடைய வாக்குதத்தத்தை பெற்றுக்கொண்ட ஆபிரகாம் பொறுமையிழந்ததின் காரணமாக இஸ்மவேல் என்ற சந்ததி உருவானது. இது போன்று நாமும் பொறுமையிழந்ததின் காரணமாக பாவத்திற்கு வழி வகுத்து நமது தலைமுறைக்கு ஆசீர்வாதத்தை சாபமாக மாற்றி வைத்திருக்கலாம். (மத்–5:5) மலைப்பிரசங்கத்தில் இயேசு சொல்கிறார். சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். பொறுமை சாந்த குணத்தை தருகிறது. அவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசு கூறுகிறார். மேலும் 1–பேதுரு–2:20–ல் நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு. நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரியமாயிருக்கும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, அநேக நேரங்களில் நான் சரியாகத்தானே செய்தேன் என்று பொறுமையிழந்து கோபம் வருகிறதா? ஒன்று சிந்தித்து பாருங்கள் கிறிஸ்து பாவம் செய்யவில்லையே. நமக்கு நன்மை தானே செய்தார். நமக்காக தானே இவ்வுலகிற்கு மானிடனாய் வந்தார். ஆனால் அவர் சிலுவையிலறையப்பட்டாரே, அவமானப்படுத்தபட்டாரே, இன்று அவரை எத்தனை முறை வேதனைப்படுதத்தி கொண்டிருக்கிறோம். ஆனால் அவர் இன்றும் நம்மீது நம்குடும்பத்தின் மீதும் பொறுமையாய் இருக்கிறாரே. யாக்–1:19–ல் ஆகையால் என் பிரியமான சகோதரரே யாவரும் கேட்கிறதற்கு தீவிரமாயும், பேசுகிறதற்கு பொறுமையாயும், கோபிக்கிறதற்கு

தாமதமாயும் இருக்கக்கடவர்கள். இதில் பேசுகிறதற்கு பொறுமையாயிருக்க வேண்டும் என்று வாசிக்கிறோம். யாக்-3:6-ல் நாவும் நெருப்புதான் அது அநீதி நிறைந்த உலகம். அது நம்முடைய சரீரத்தை கறைபடுத்தி ஆயுள் சக்கரத்தை கொளுத்தி விடுகிறதாயும் இருக்கிறது. அன்பானவர்களே, பொறுமை மனிதர்களிடத்தில் அன்பை பிரதிபலிக்க உறவை நிலைபடுத்த பேசுகிறது, முக்கியமானவைகளில் ஒன்று. ஆகவே பேசுகிற வார்த்தைகளை பொறுமையாகவும் அவைகள் உறவுகளை நிலைப்படுத்துகிறதாயும் உறுதிப்படுத்துகிறதாயும் அக்கறையுள்ளதாயும் இருக்க வேண்டும்.

சகோதர, சகோதரிகளே, உபத்திரவத்தில் மேன்மை பாராட்டாமலும் பொறுமையைப் பெற்று கொள்ள அவருடைய பாதத்தில் அமர்ந்திருக்கிறவர்களாகவும் வாழந்து இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்வோம்.

கிறிஸ்துவின் பணியில்

ATC Youth Team

Be an Example : I Timothy 4:12

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !

இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.தாஸ் கருணா(50393352) அவர்களிடத்திலும்.
திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. பிராங்க்ளின்(91 9500710157)அவர்களிடத்திலும்,
போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன்(97322962) அவர்களிடத்திலும்,
ஆலய கட்டுமான ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த்(97666458) அவர்களிடத்திலும்,

கொடுத்து ஊழியத்தை தாங்கமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பெலனடைந்திடு பெலப்படுத்திடு

உடற்பயிற்சி செய்பவர்கள் சத்தான ஆகாரத்தை உட்கொண்டு சரீரத்தில் நல்ல பெலன் பெற்று வாழ்வார்கள். அது அவர்களுக்கு மாத்திரம் அல்ல மற்றவர்களுக்கும் அவர்கள் பிரயோஜனமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபிக்கும் போது, வேதம் வாசிக்கும் போது, தேவ பிரசன்னம் நம்மைப் பெலப்படுத்துகிறது. எப்படி ஒரு மரம் கனி கொடுத்து நிழல் தந்து பிரயோஜனமாய் இருக்கிறதோ அதுபோல நாமும் ஆவியின் கனிகளைத் தருவதால் பலருக்கும் பிரயோஜனமாய் வாழ்ந்திட முடியும். நீங்கள் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்க மாட்டீர்கள் (யோவான் 15 : 4) தேவ பிரசன்னம் மாத்திரமே ஒரு விசுவாசியை பெலனடையச் செய்யும். பரிசுத்த ஆவி வந்த போது சீஷர்கள் பெலனடைந்தார்கள். இயேசுவின் திருப்பணி அவர்கள் மூலமாய் தொடர்ந்தது. சாட்சிகளாய் வாழ்ந்தார்கள்.

வேத வசனம் பலருக்கும் போதிக்கப்பட்டு சீஷர்கள் கூட்டம் பெருகினது. அன்று தொடங்கிய பணி இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அஹமதி தமிழ் திருச்சபையின் மூலமாய் தொடர நீங்களும் நானும் அதற்காக அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஆண்டவர் நம்மை பெலத்தால் நிரப்புகிறார் எதற்கு பலரையும் பெலப்படுத்த சாட்சியாய் வாழ்ந்திட நற்செய்தியை பலருக்கும் அறிவித்திட. சத்துருவானவன் கொண்டு வரும் வேற்றுமை உணர்வுகளைக் களைந்திடுவோம், ஒரு மனப்பட்டு ஜெபிப்போம் பெலனடைந்து சாட்சியாய் வாழ்வோம், பலரையும் சாட்சிகளாய் மாற்றுவோம்.

தேவன் தாமே நம்மை ஆசிர்வதிப்பாராக ஆமென்.



இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் (ஆதி–12:2) "

செல்வன். ஜோசப் அருள் தர்மர்
செல்வன். நத்தானியேல் நக்கீரன்
செல்வி. ஷாலோம் கிரேஸ் ஆமோஸ்
சகோ. ஜெய்சன் ஆல்ப்ஸ் ஜேம்ஸ்
சகோ. சுஜின் ஹெக்கல்
செல்வன். சாலமோன் இம்மானுவேல்
சகோதரி. ஜீவரத்தினம் மகேஷ்ராஜ்
சகோ. ஸ்டாலின் சுனில் வின்ஸ்
சகோதரி. டாப்னி ஜெபசிங்
செல்வன். ஜீவன் ஆஷ்வா பிரசாத்
செல்வன். ஜோஷ்வா ராமர்
சகோ.வர்கீஸ்
செல்வி. ரியா பிரிட்டி ஸ்டீபன்
செல்வன். ஆதித் சிங் சுபின் சிங்
செல்வன். லீதாஹரன் ராஜாகுமார்
செல்வி. லெனிஷா வர்கீஸ்
செல்வன். அனிஷ் தினேஷ்

செல்வி. பிரியங்கா சதீஷ்குமார் எத்திராஜ்
சகோ. மார்க் ஆன்டனி
சகோதரி. தமிழ்செல்வி
சகோதரி. சாந்தி கண்ணன்
சகோதரி. அனிஷா ஆல்வின்
செல்வன். ரோஷன் அசோக்குமார்
செல்வி. அரோலினா விஜயன்
செல்வன். கேபரியேல் ஜெரேமியா
செல்வி. ரியானா R.B. பென்ஷிகா
சகோதரி. சர்மிளி T. பிரவின்
சகோ. ஜெயக்குமார் ஞானதாஸ்
சகோ. தம்புகுமார் டென்னிஸ்
சகோதரி. ஜெபராணி
செல்வி. இபின் காட்சில் ஜெயகுமார்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி.பியூலா மெர்ஸி ஜெகநாதன்

இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)



திருமதி/திரு. குமாரசாமி & லீலா
திருமதி/திரு. விபின் & ஜெபராணி
திருமதி/திரு ஜான் கெஸ்டன் & ஜெனிஷா
திருமதி/திரு. செங்குட்டுவன் & பிரிசில்லா
திருமதி/திரு. ராஜா குமார் & பானு ராதா மணி

2026 – செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

நாள்	ஆராதனை	செய்தி
04/10/2026	Sis. ஜீனா சதீஷ்குமார்	Sis. எப்சிபா ஸ்டீபன்
11/10/2026	சகோ. பிரசாத்	சகோ. சாம் சுந்தர்
18/10/2026	Sis. அல்ஜியா தாமஸ்	Sis. டெய்சி எபிநேசர்
25/10/2026	சகோ. கிறிஸ்டோபர்	சகோ. ஆண்டனி

வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

நாள்	ஆராதனை	செய்தி
02/10/2026	சகோ.அருண் செல்வகுமார்	சகோ. ரவிஜான் பீட்டர்
09/10/2026	சகோ. டேவிட்	சகோ. ஸ்டாலின்
16/10/2026	உபவாச திருவிருந்து ஆராதனை	
23/10/2026	சகோ. எபிநேசர்	சகோ. ஏசு ரெத்தினம்
30/10/2026	சகோ. சுபின் சிங்	சகோ. சாம் ஆனந்த்

ஆராதனை ஒழுங்குகள்

சங்கிலி தொடர் ஜெபம்

01/10/2026 மாலை 6:00 முதல் 02/10/2026 காலை 6:00 வரை

08/10/2026
முழு இரவு ஜெப ஆராதனை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம்– 10:00PM - 1:00AM

10/10/2026
சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30PM - 8:15PM
வேத வினா பகுதி – I யோவான் , II யோவான், III யோவான் , யூதா

30/10/2026
வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30PM - 8:15PM
வேத வினா பகுதி – I யோவான் , II யோவான், III யோவான் , யூதா

31/10/2026–Saturday
Area Prayer Cell
Time-6:30-7:30

சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 வரை

திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 வரை

செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

2026 அக்டோபர் மாதத்திற்கான வேத வினா



கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. மாடு வழக்கமாய் முட்டுமென்று எஜமான் அறிந்தும் அதைக் கட்டி வைக்காததினால், அது ஒருவரைக் கொன்றால் செய்ய வேண்டியது என்ன ?
2. அடிமை என்றைக்கும் தன் எஜமானிடம் சேவிக்க அடையாளம் என்ன ?
3. யாரை உயிரோடே வைக்க வேண்டாம் ?
4. ஏவியரையும், ஏத்தியரையும், கானானியரையும் துரத்திவிட யாரை உனக்கு முன்னே அனுப்புவேன் ?
5. தேவ பர்வதத்தில் ஏறிப்போனவர்கள் யார் யார் ?
6. ஆட்டுக்கடாவினால் இடும் பலியின் பெயர் என்ன ?
7. இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களை எதில் வெட்ட வேண்டும் ?
8. வேலைக்காரியை தன் குமாரனுக்கு நியமித்திருந்தானானால் எஜமான் அவனை யாரை நடத்துவது போல நடத்தக்கடவன் ?
9. வாசஸ்தலத்தில் விசித்திர வேலையாய் என்ன இருக்க வேண்டும் ?
10. பரிசுத்த அபிஷேக தைலம் எதன் மேல் வார்க்கப்படலாகாது ?
11. விநோதமான வேலைகளை யோசித்து செய்கிறதற்கு தேவ ஆவியால் நிரப்பப்பட்டேன். நான் யார் ?
12. ஆரோன் ஜனங்கள் மேல் எதை சுமத்தியதாக மோசே கூறினான் ?
13. ஒருவரும் வெறுங்கையோடே வரக்கூடாதது எங்கே ?

விடைகளை வருகின்ற 20-10-2026 க்குள்
(WhatsApp - +91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

“ யாத்திராகமம் : 21–40 ”

அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7

2026- செப்டம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1. எபிரேய பெண்கள். – யாத்திராகமம் 1:19
2. இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள். – யாத்திராகமம் 5: 15,16
3. மோசே , ஆரோன். – யாத்திராகமம் 5:20.21
4. அவர்கள் ஜீவனையும். – யாத்திராகமம் 1:10
5. தவளைகள் – யாத்திராகமம் 8:6
6. வாற்கோதுமை , சணல் – யாத்திராகமம் 9:31
7. இடிமுழக்கமும் , கல்மழையும் – யாத்திராகமம் 9:33
8. கொப்புளங்கள் நிமித்தம். – யாத்திராகமம் 9:11
9. ஜனங்கள் யுத்தத்தைக் கண்டு மனமடிந்து எக்ப்துக்கு திரும்பக்கூடும் என்பதால். – யாத்திராகமம் 13:17,18
10. கர்த்தருடைய நாசியின் சுவாசத்தினால் – யாத்திராகமம் 15:6–8
11. காடைகள் – யாத்திராகமம் 16:13
12. அமலேக்கியர் – யாத்திராகமம் 17:8
13. மோசேயின் மாமனாகிய எத்திரோ – யாத்திராகமம் 18:1
14. கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை – யாத்திராகமம் 20:7
15. மோசே , ஆரோன் , ஊர் – யாத்திராகமம் 17:10

2026- செப்டம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. சுகந்தி
சகோதரி. ஜோன்ஸ் ராணி
சகோதரி. V. வனிஷா ஜெஸ்லட்
சகோதரி. ஜெஸ்லட் வர்க்கீஸ்
சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. சாந்தி
சகோதரி. சினேகா எபிநேசர்

சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. ஷீபா
சகோதரி. ஜாஸ்மீன் பென்சாம்
சகோதரி. மரியகுளோரி
சகோதரி. ஜீனா சதீஷ்குமார்
சகோ. எபிநேசர்

கர்த்தரே என் ஜீவனின் பெலன்

சங்கீதம் 27:1_ கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன் ?

சங்கீதம் 29:11_ கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன் கொடுப்பார். கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்.

சங்கீதம் 84:5_ உம்மிலே பெலன் கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். நம்முடைய தேவன் நம்மைப் பலப்படுத்த விரும்புகிறார்.

நம்முடைய ஆவி ! நம்முடைய ஆத்துமா ! நம்முடைய சரீரம் !

பவுலின் வாழ்க்கையில் இருந்து நாம் இம் மூன்றிலும் ஏன் பெலன் கொள்ள வேண்டும் என்று பார்க்கலாம்.

1.நம்முடைய ஆவியில் பெலன்

பிலிப்பியர் 4:11_12, 11_ல் என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிக்கக் கற்றுக் கொண்டேன். 12_ல் தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் தெரியும், எவ்விடத்திலும், எல்லாவற்றிலும், திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். நாம் ஒரு திருப்தியான வாழ்க்கையை வாழ்கிறோம். நம்முடைய வழியில் வரும் எல்லாத் துன்பங்களையும் உபத்திரவங்களையும் துக்கங்களையும் எதிர் கொள்ள நாம் பலப் படுத்தப்படுகிறோம். இவ்வாறு நமது ஆவி பலப்படுத்தப்படும் போது மன நிறைவும் சகிப்புத் தன்மையும் நம்மிடம் நிலைநாட்டப் படுகிறது.

2.நம்முடைய ஆத்துமாவில் பெலன்

அப் 9:22 சவுல் அதிகமாகத் திடன் கொண்டு இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி தமஸ்குவிலே குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப் பண்ணினான். அப் 9:17 அப்பொழுது அனனியா போய் வீட்டுக்குள் பிரவேசித்து அவன்மேல் கையை வைத்து சகோதரனாகிய பவுலே நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர் நீ பார்வையடையும் படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும் படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். அப் 18:5 மக்கெதொனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயும் வந்த போது பவுல் ஆவியில் வைராக்கியங் கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்.இன்று நம்மிடம் அத்தகைய வல்லமை இருக்கிறதா ? அப் 1:8_ல் பார்க்கிறோம் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

3.நம்முடைய சரீரத்தில் பெலன்

II கொரியந்தியர் 12:7_10. 7_ல் அன்றியும் எனக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாத படிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப் பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாத படிக்கு அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. 8_ல் அது என்னை விட்டு நீங்கும் படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். 9_ல் அதற்கு அவர் என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும் படி என் பலவீனங்களை குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். 10_ல் அந்தபடி நான் பலவீனவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும் நிந்தைகளிலும் நெருக்கங்களிலும்

நான் பிரியப்படுகிறேன் பவுலின் பலவீனங்களையும் இயலாமைகளையும் பற்றி நாம் வாசிக்கிறோம் ஆயினும் சரீரத்தில் பலவீனனாயிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் நான் பெலனாயிருப்பதற்கு அவர் தைரியமாகப் பிரகடனம் செய்கிறார்.

நெகேமியா 8:10 ... கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றார். ஆபகூக் 3:19 ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன் அவர் என் கால்களை மான் கால்களைப் போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்.

பிரியமானவர்களே கர்த்தருக்குள் எப்போதும் மகிழ்ச்சியாயிருப்போம் அதுதான் நம்முடைய பெலன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு பிலிப்பியர் 4:13. கிறிஸ்துவில் பெலப்படுவோம் அவர் நம்மை பெலப்படுத்துவார் நாம் பெலன் கொள்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள்

Sis. டெய்சி எபிநேசர்.

50–வது சபை ஆண்டுவிழா குறிப்புகள்

ராஃபில் கூப்பன் Collection Money-ஐ
சகோ. கிறிஸ்டோபர், சகோ. சுபின்சிங் , சகோதரி. டெய்சி எபிநேசர், சகோதரி. அல்ஜியா தாமஸ் அவர்களிடத்திலும்,

சௌவினியர்(Souvenir) மேகசினில் உங்களது படைப்புகளை(கவிதைகள்,கட்டுரைகள்,வாழ்த்துச் செய்திகள், தனிப்பட்ட அல்லது குடும்ப புகைப்படங்கள்) சகோ. சிவகுமார், சகோ. ஆண்டனி, சகோ. சாம் சுந்தர், சகோ. திவ்ய ராஜ் அவர்களிடத்திலும் கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

Kids Corner

OCTOBER MONTH QUIZ FOR CHILDREN

1. What were the names of the two Hebrew midwives ?
2. Why did the midwives not Kill the Hebrew boys ?
3. Where did Moses mother put him ?
4. Who found Moses in the river ?
5. What did Moses see in the Wilderness ?
6. What name did God tell Moses ?
7. Who helped Moses to speak to pharaoh ?
8. What did the Israelites put on door posts ?
9. What feast did the Israelis Keep when God delivered them from Egypt ?
10. What did Phoroah do after the Israelites left Egypt ?
11. What happened to the Red Sea ?
12. How did the Israelites cross the Red sea ?
13. What happened to the Egyptian army in the Red sea ?
14. Who led the women with a timbrel ?
15. What was the name of the place where water was bitter ?

Kids Find the answer from the Book of

" Exodus : 1 – 15 Chapter's "

ANSWER'S FOR THE MONTH OF SEPTEMBER

1. Caleb - Joshua 14:13
2. Shiloh - Joshua 18:10
3. Nun - Joshua 19:49,50
4. Timanath-Serah - Joshua 19:50
5. Six cities - Joshua 20:7,9
6. for someone who accidentally killed another person to flee there for Safety - Joshua 20:3
7. Rest from all their enemies - Joshua 21:44
8. An after - Joshua 22:10
9. as a witness between them and the children of Israel that the Lord of God – Joshua 22:27
10. as for me and my house we willserve the Lord - Joshua 24:15

But Jesus called them unto him, and said, Suffer little children to come unto me, and forbid them not: for of such is the kingdom of God.

Luke 18:16

CHILDREN WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF SEPTEMBER

Ebisha
Adriel
Andrea
Aran Rajaselvan
Rheul Ashkinaz
Riya Priti
Abel

Solomon
Felisha
Feshika
Mary Hannaani
Mahendrika Sri
Dion Bensam

கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில













ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

முதன்மை ஊழியர்

BRO. ஆரோக்கியதாஸ் . P

99870126

செயலாளர்

BRO. தாமஸ்

66810423

பொருளாளர்

BRO. ஜான்சன்

97610275

வாலிப ஐக்கிய தலைவர்

BRO. M. கிறிஸ்டோபர்

67096449

பெண்கள் ஐக்கிய தலைவி

SIS. டெய்சி எபினேசர்

60686612

**என் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்து,
அவருடைய இரட்சிப்பில்
மகிழ்ந்திருக்கும்.**

சங்கீதம் 35:9

Church e-mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

www.ahmaditamilchurch.com
Follow: ATC Tamil | YouTube | Facebook | Instagram

PRIVATE CIRCULAR ONLY